**தலைப்பு 271 – திருகோணமலை மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 271 - திருகோணமலை மாவட்ட செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஆகஸ்ட் 19 ஆந் திகதி திருகோணமலை மாவட்ட செயலகத்தின் மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தெடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் அமுலாக்குதல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

மாவட்ட செயலகத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 406.22 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 396.44 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 9.78 மில்லியன் அதாவது 2.41 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 352.92 | 344.12 | 8.80 | 2.49 |
| மூலதனம் | 53.30 | 52.32 | 0.98 | 1.84 |
| மொத்தம் | **406.22** | **396.44** | **9.78** | **2.41** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக திருகோணமலை மாவட்ட செயலகத்திற்கு 26 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் 15 திணைக்களங்களால் கூட்டுமொத்தமாக ரூபா 961.25 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் 876.49 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் ரூபா 84.76 மில்லியன் அல்லது 8.82 சதவீதமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய விடய இலக்கம் 27101 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதியும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 25.88 | 23.29 | 17.87 | 19.69 | 100.00 | 74.58 |

## 2.3 கட்டுநிதி கணக்கு

மாவட்ட செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 7002/0000/00/0289/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 20.71 மில்லியனாக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

மாவட்ட செயலகத்தின் 04 வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 79.22 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0002/0104/000 | 2.04 |
| 6000/0000/00/0013/0070/000 | 4.43 |
| 6000/0000/00/0014/0011/000 | 5.59 |
| 6000/0000/00/0016/0052/000 | 67.16 |
| | 79.22 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

மாவட்ட செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டு கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 பந்தியில் காட்டப்பட்டவாறு முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 பதிவேடுகளும் ஏடுகளும் பேணப்படாமை

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் பின்வரும் பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் |
| (ii) | பிணைப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891(1) |
| (iii) | நட்டங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 |
| (iv) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்

07 செலவின விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அச்செலவின விடயங்களுக்கான தேறிய நிதி ஏற்பாட்டில் 27 சதவீதத்திலிருந்து 47 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

#### 3.3.2 ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விவசாய அமைச்சின் மூலம் பழக் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்காக செலவின விடயமொன்றின் கீழ் ரூபா 0.1 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் மூலம் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த முன்பள்ளி மாணவர்களுக்காக பால் கோப்பையொன்று வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் 2015 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அதன் கீழ் திருகோணமலை மாவட்டத்தின் 11 பிரதேச செயலகப் பிரிவுகளில் ரூபா 7,338,803 செலவிடப்பட்டிருந்தது. எனினும் திருகோணமலை மாவட்டத்தில் கூடுதலாக மக்கள் வசிக்கின்ற பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவில் 96 முன்பள்ளி மற்றும் முன் சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் செயற்படுகின்றதுடன் அதில் 13 இற்கு மாத்திரம் பால் கோப்பை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துவதற்காக ரூபா 914,760 ஆன நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 640,380 தொகை அல்லது 70 சதவீதமான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

### 3.3 கட்டுநிதிக் கணக்கு

திருகோணமலை மாவட்ட செயலகத்தினால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதி மீதி ரூபா 20,706,344 ஆக இருந்தது. அதில் ரூபா 75,000 கூட்டுத்தொகையான மீதியொன்று மூதூர் பிரதேச செயலகத்திற்குரியதாக 2011 ஆம் ஆண்டிலிருந்து கொண்டு வரப்பட்டிருந்தது.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 ஆண்டுகளை மிகைத்த ரூபா 7,755,472 கூட்டுத்தொகையான 120 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கந்தளாய் ஸ்ரீ கங்காராம விஹாரையின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 250,000 நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்நிதிஏற்பாடு 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உரிய செயற்பாடு நிறைவேற்றப்படாமல் அப்பணம் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபை மூலம் தண்ணீர் கோபுரமொன்றை நிர்மாணிப்பதற்கு காணியொன்றை கையேற்பதற்காக இழப்பீடு செலுத்துவதற்கு கந்தளாய் பிரதேச செயலகத்திற்கு ரூபா 150,000 நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 73,185 தொகை 2011 ஆம் ஆண்டு முதல் 2015

திசெம்பர் 31 ஆந் திகதி வரை பயன்படுத்தப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) சவூதி அரோபியாவில் துரதிஷ்டவசமாக உயிரிழந்த செல்வி ரிசானா நாபிக்கின் குடும்பத்திற்கு புதிய வீடொன்றை நிர்மாணிப்பதற்காக 2013 ஆம் ஆண்டின் போது மூதூர் பிரதேச செயலகத்திற்கு ரூபா 250,000 நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அம்முழு நிதிஏற்பாடும் 2013 சனவரி 23 ஆந் திகதி முதல் குறித்த செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்படாமல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(உ) மாவட்ட செயலகத்திற்குரிய சங்கமித்தா ஓய்வூதிய மண்டபத்தினை திருத்தியமைப்பதற்காக 2014 ஒக்தோபர் 21 ஆந் திகதி ரூபா 406,686 இற்கு ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2015 மார்ச் மாதம் அளவில் அம்முழுத்தொகையும் செலவிடப்பட்டிருந்தது. சங்கமித்தா ஓய்வூதிய மண்டபத்திலிருந்து கிடைக்கும் வருமானம் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்படுவதுடன் மேற்குறித்த செலவினத்திற்காக 2015 யூலை 29 ஆந் திகதி வரையிலும் மாற்றல் பத்திரமொன்று மூலம் செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்த்து.

## 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்றுக்கள்

27101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,128,089 ஆக இருந்ததுடன், அந் நிலுவை மீதிகள் 01 ஆண்டிலிருந்து 06 ஆண்டுகள் வரையான காலவீச்சிலிருந்து காணப்பட்டு வருகின்ற போதிலும் அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதன் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது.

## 3.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.6.1 வருடாந்த பெறுகைகள் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 4.2.1 (அ), (ஆ) மற்றும் (இ) வழிகாட்டலின் பிரகாரம் பிரதான பெறுகைகள் திட்டமொன்று 03 ஆண்டுகளுக்காக தயாரிக்கப்பட வேண்டியதுடன், மாவட்ட செயலகத்தினால் 2015 ஆம் ஆண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அடுத்துவரும் ஆண்டிற்காக விரிவான பெறுகைகள் திட்டமொன்று 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 4.2.1 (உ) வழிகாட்டலின் பிரகாரம் பிரதான பெறுகைகள் திட்டம் 06 மாதங்களுக்கு ஒருமுறை நாளதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.6.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்ட செயலகத்தின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்**

கீழே விபரிக்கப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்றும் குறைவான பயன்பாட்டுடனும் நிலவியமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| சொத்து வகை | அலகு எண்ணிக்கை | விளைவற்றதும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலப்பகுதி |
| --- | --- | --- |
| மாவட்ட செயலகம் | | |
| மோட்டார் வாகனங்கள் | 06 | 01 ஆண்டு முதல் |
| பதவி ஸ்ரீபுர பிரதேச செயலகம் | | |
| நீர் வடிகட்டி | 01 | 01 ஆண்டு முதல் 06 ஆண்டுகள் வரை |

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தல்**

பதவி ஸ்ரீபுர, கோமரன்கடவல, பட்டினமும் சூழலும் மற்றும் மொரவெவ ஆகிய பிரதேச செயலகங்களில் 2015 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட ஏனைய பரிந்துரைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

யலி புபுதமு இலங்கை செயற்திட்டத்தின் செயற்திட்டக் கணக்காளரால் 2015 யூன் 05 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட வழங்கல் கட்டளையின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்கு கையளிக்கப்பட்ட வாகனம் மாவட்ட செயலாளரின் பெயருக்கு 2016 பெப்ரவரி 25 ஆந் திகதி வரையிலும் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 உள்நாட்டு நிதயீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

### 3.7.1 செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடுதல்

பட்டிடனமும் சூழலும் பிரதேச செயலகத்தினால் கப்பல்துறை பிரதேசத்தில் யானை வேலிகளை நிர்மாணிக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 ஆகஸ்ட் மாதத்தின் போது ரூபா 1,148,993 செலவிடப்பட்டதன் பின்னர் அச்செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தது.

## 3.8 செயலாற்றல்

2015 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பவற்றின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கமநெகும (கிராம எழுச்சி) அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மஹதிவுல்வெல II ஆம் கட்டத்திற்காக அம்மகப்பேற்று சிகிச்சை நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,960,468 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், மகப்பேற்று நிலையத்திற்கு பொருத்தப்பட்டிருந்த யன்னல் மற்றும் கதவுகளுக்காக I ஆம் தர மரப் பலகைகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த மகப்பேற்று நிலையத்தின் நிர்மாணம் 2015 திசெம்பர் 31 இல் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், நீர் வழங்கல் மற்றும் மின்சார வழங்கல் என்பவற்றை வழங்கி சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் மகப்பேற்று நிலையத்தினை நிர்மாணித்ததால் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பதவி ஸ்ரீபுர பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தினுள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 258 சிறுநீரகம் பாதிக்கப்பட்ட நோயாளிகள் அறிக்கையிடப்பட்டிருந்தனர். அதற்கு பரிகாரமாக நீர் வடிகட்டி மூலம் நீரை வழங்கும் நோக்கில் திருகோணமலை பிரதேச செயலகத்தினால் 2010 ஆம் ஆண்டில் பதவி ஸ்ரீபுர பிரதேச செயலகத்திற்கு 500 லீற்றர் நீர் வடிகட்டி இயந்திரமொன்று வழங்கப்பட்டிருந்தது. அது 2016 யூன் மாதத்தின் கணக்காய்வு திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் பிரதேச செயலகத்தின் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சிறுநீரக நோயாளர்களுக்கு வழங்குவதற்கிருந்த நீர் வடிகட்டி இயந்திரம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாததன் காரணமாக குறித்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 3.9 நட்டங்களும் சேதங்களும்

மாவட்ட செயலகம் மற்றும் 04 பிரதேச செயலகங்களில் 2002 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 09 வாகனங்கள் விபத்துக்கு உட்பட்டிருந்தமையால் ரூபா 3,587,096 தொகையான நட்டங்கள் ஏற்பட்டிருந்தன. அது தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் 104(4) இன் கீழான விசாரணைகள் 2016 யூன் 30 ஆந் திகதி அளவிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.10 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

மாவட்ட செயலகத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக் காட்டப்பட்ட பற்றாக்குறைகள் சம்பந்தமாக மாவட்ட செயலகத்தினால் சரிசெய்யப்படாத பந்திகளுக்கான தொடர்பு கீழே காட்டப்பட்டுள்ளன.

| **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு** | | **தொடர்புபட்ட விடயம்** |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2014 | 3.7(அ) | 2011 ஒக்தோபர் மாதம் வரை திருகோணமலை மாவட்ட செயலகம் செயற்பட்டு வந்த கட்டிடம் ஒல்லாந்தர் கோட்டையிலுள்ள 372 ஏக்கர் அளவிலான காணி மற்றும் அதில் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் வீடுகள் உட்பட தொல்பொருள் காணியாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் உரித்தினை கையளிக்குமாறு 2011 சனவரி 04 ஆந் திகதிய M/EP/1/7 A ஆம் இலக்க தொல்பொருள் |

| | | |
|---|---|---|
| | | திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் சட்டரீதியாக ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2014 | 3.15(அ) | திருகோணமலை மாவட்ட செயலகம் அமைந்துள்ள காணி அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட போதிலும் அதன் சட்டரீதியான உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2014 | 3.11(இ) | வில்கம வனத்திற்கு மத்தியில் சுற்றாடல் பூங்காவைச் சுற்றி யானை வேலிகளை அமைப்பதற்கு வழங்கப்பட்டிருந்த உபகரணங்கள் பாதுகாப்பின்றி விளைவற்றுக் காணப்பட்டன. தற்போது உரிய சுற்றாடல் பூங்காவின் நிர்மாணம் நிறுத்தப்பட்டிருந்தது. |

### 3.11 முகாமைத்துவப் பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) திருகோணமலை மாவட்ட செயலகத்தினால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வரையப்பட்ட ரூபா 16,381,816 தொகையான 05 காசோலைகள் 2016 பெப்ரவரி 15 ஆந் திகதி வரையிலும் பெறுனர்களுக்கு வழங்கப்படாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) மூதூர் பிரதேச செயலகத்திற்குரிய அதிகாரப் பிரதேசத்தினுள் செயற்படுத்தப்படும் 07 கிராம அபிவிருத்தி சங்கங்களுக்காக ரூபா 7,265,000 ஆன சீவனோபாய அபிவிருத்திக் கடன் வெவ்வேறு செயற்திட்டங்கள் மூலம் வழங்கப்பட்டிருந்தன. செயற்திட்ட முடிவில் அக்கடனின் நிர்வாக நடவடிக்கைகள் மூதூர் பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த உத்தியோகத்தரால் அதற்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மூதூர் பிரதேச செயலகத்திற்குரிய புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் மூலம் கிராமிய மக்களுக்கு மலசலகூட வசதிகளை வழங்குவதற்காக நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அதற்காக நலனாளிகளை தெரிவுசெய்தல் புள்ளி வழங்கல் வழிகாட்டலுக்கு இணங்க கூடுதலாக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட 09 நலனாளிகள் தெளிவான காரணங்கள் இல்லாமல் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

### 3.12 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை கீழே தரப்படுகின்றது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 40 | 35 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 36 | 14 | 22 |
| (iii) | இரண்டாம் நிலை | 804 | 474 | 330 |
| (iv) | ஆரம்ப நிலை | 145 | 120 | 25 |
| | மொத்தம் | 1025 | 643 | 382 |